# அறிமுகம்

## [1 சாமுவேல் 16]

*இத்தாலியில் உள்ள ஃப்ளாரன்ஸ் என்னும் இடத்திலிருந்த கர்த்தருடைய சபையில், 1974ம் ஆண்டு மே மாதம் 12ம் தேதியன்று ஞாயிறு காலையில் நானும் என் குடும்பமும் ஆராதித்துக் கொண்டிருந்தோம். ஆராதனை முடிந்த உடனே, ஃப்ளாரன்ஸில் இருந்த ஒரு ஊழியக்காரரான ஏர்ல் எட்வர்ட்ஸ் அவர்கள், எங்களைத் தமது காருக்கு விரைவாகக் கூட்டிச் சென்றார். அவர் காரை, அதிவேகமாக ஓட்டிக் கொண்டிருக்கும் போதே, "இந்த அருங்காட்சியகம் இரண்டு மணிக்கெல்லாம் பூட்டப்பட்டு விடும், திங்கட்கிழமைகளில் இதைத் திறக்க மாட்டார்கள் - மேலும் செவ்வாய்க் கிழமையன்று நீங்கள் இங்கிருக்க மாட்டீர்கள்!" என்று விளக்கிக் கொண்டே சென்றார். தேவனுடைய கிருபையினால் எந்த அசம்பாவிதமும் இன்றி நாங்கள் கேலரியா டெல் அகாடெமியா என்ற அந்த அருகாட்சியகத்தைச் சென்றடைந்தோம்.*

*அந்த அருகாட்சியகத்தினுள் நாங்கள், மைக்கேல் ஆஞ்செலோவினால் அறைகுறையாக செய்து முடிக்கப்பட்டிருந்த சிலைகள் நிரம்பியிருந்த ஒரு முகப்பறை வழியே நடந்து சென்றோம் - திடமான கல்லில் இருந்த உருவங்களைச் செதுக்கிய செயல்முறையின் அதிசயம் பற்றிய உணர்வு என்னுள் நிரம்பிற்று. பின்பு நாங்கள் ஒரு பெரிய அறைக்குள் சென்றோம். எங்களுக்கு முன்னால் பதினான்கு அடி உயரமான பெரிய சிலை ஒன்று நின்றிருந்தது, இது மைக்கேல் ஆஞ்சசெலோவின் தலைசிறந்த படைப்பு என்று பலரால் கருதப்படுகிறது: இது தாவீதின் சிலையாயிருந்தது.*

*இந்தச் சிலை விரோதியை எதிர்த்து நின்ற இளைஞரான தாவீதாக உள்ளது. அவரது புருவம் குவிந்து வளைந்திருந்தது, அவரது கூர்நோக்குள்ள கண்கள் எதிரியின் மீது நிலைத்திருந்தன. அவரது கவண் அவர் தோளின் குறுக்கே தொங்கிற்று. அவரது உடல் விரைப்பாயிருந்தது ஆனால் அது நரம்புகளின் சிரமத்தால் அவ்வாறாகியிருக்கவில்லை, அது (அவரது உடல்) செயல்படத் தயாராயிருந்தது. வெற்றி விளையும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை. அந்தச் சிலையின் மார்பு மூச்சு விடுதலினால் விரிவதையும். அதன் உதடுகள், "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே வருகிறேன் ... யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" (1 சாமு. 17:45-47) என்ற விசுவாசத்தின் வார்த்தைகளைக் கூறுவதையும் ஏறக்குறைய எதிர்பார்க்குமளவுக்கு சிற்பியின் திறமை அவ்வளவாய் அந்தச்*

*சிலையில் வெளிப்பட்டது. தாவீதைப் பார்க்காமல் ஃப்ளாரன்ஸிற்கு மேற்கொள்கிற எந்தப் பயணமும் நிறைவடைவதில்லை என்று ஏர்ல் எட்வர்ட்ஸ் அறிந்த காரணத்தால் அவர் எங்களை அவ்வளவு அவசரமாய்க் கொண்டு சேர்த்தார்.*

*அந்தச் சிலை எவ்வளவோ பெரியதாக இருந்தது, ஆயினும் கீழ்வரும் பாடக்கருத்தின் முன்னால் அது மங்கித் தேய்வதாகவே உள்ளது: தாவீது - இவரது வாழ்வு பற்றிக் கூறுவதற்குப் பழைய ஏற்பாட்டில் அறுபத்தாறு அதிகாரங்கள் எடுத்துக் கொள்ளப்படுமளவுக்கும், புதிய ஏற்பாட்டில் ஐம்பத்தொன்பது முறை குறிப்பிடப்படுமளவுக்கும் முக்கியமானவரா யிருந்த இந்த மனிதர் - "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதர்" என்று வேதாகமத்தில் அழைக்கப்படுகிற ஒரே மனிதராக உள்ளார்.*

*1 சாமுவேல் 13:14ல், சவுல் ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணிக்கப் பட்ட பின்பு, சாமுவேல், "இப்போதோ உம்முடைய இராஜ்யபாரம் நிலை நிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனா யிருக்கக் கட்டளையிட்டார்" என்று கூறினார். அப். 13ல், பவுல் பிசீதியா வின் அந்தியோகியாவில் இருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கித்த போது, அவர் சவுலைப் பற்றிக் கூறிவிட்டு, பின்பு "பின்பு அவர் அவனைத் தள்ளி, 'தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் அவன் செய்வான்' என்று அவனைக் குறித்து சாட்சியுங் கொடுத்தார்" (வ. 22) என்று கூறினார்.*

*தாவீதின் வாழ்வு பற்றிக் கூறும் (வேதாகமத்தின்) அத்தியாயங்கள் அவரது இருதயத்தை மையப்படுத்தும் அளவை விட அதிகமாய் அவரது வரலாற்றை மையப்படுத்துவதில்லை.*

*"தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதனாக" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? இந்தச் சொற்றொடர் பரிபூரணத்தைக் குறிக்கிறதா? இது மிகவும் அரிது. தாவீது அருங்காட்சியகத்தில் ஒரு சலவைக் கல் பரிசுத்தவானாக இருக்கவில்லை. சூடான இரத்தம் அவரது நரம்புகளின் வழியே பாய்ந்தோடிற்று, அவரது உடலில் பலத்த உணர்வு இருந்தது. பறக்கக் கூடியது எதைக் காட்டிலும் தாவீது மிக உயரமாய்ப் பறந்தார்; அவர் மிக பலமாகவும் விழுந்தார்.*

*இந்தச் சொற்றொடர், ஒருவரின் இருதயம் தேவனுடைய இருதயத் துடன் இசைவு பெற்றிருப்பதையே அர்த்தப்படுத்துகின்றது. பின்வரும் சொல்வழக்கை நாம் இன்றைய நாட்களில் பயன்படுத்துகிறோம்: "என் இருதயத்திற்கு ஏற்ற மனிதர் அதோ அங்கு செல்கின்றார்." இச்சொல் வழக்கின் மூலம் நாம், "அந்த நபர் நான் உணர்வது போலவே உணரு கின்றார்" என்று அர்த்தப்படுத்துகின்றோம். நாம் நமக்குள்ளாகவே பலமாய் உணரும் விஷயம் பற்றி சீரான கருத்தை நம் மனதில் கொண்டுள்ளோம்.*

*தாவீதின் வாழ்வை நாம் ஆராய்ந்து பார்க்கையில், நாம் அவரது நல்ல மற்றும் மோசமான நாட்கள் பற்றிப் படிப்போம்; நாம் அவரது உயர்வுகளையும் தாழ்வுகளையும் காண்போம். தாவீது தமது மிகச் சிறந்த*

*நிலையில் இருந்த போதிலும், அல்லது அவர் தமது மிக மோசமான நிலையில் இருந்த போதிலும், அவரது பற்றுறுதியானது எப்பொழுதும் கர்த்தரிடத்திலேயே இருந்தது. வாழ்வின் புயல்களினால் தாவீதின் ஆவிக்குரிய திசை காட்டும் கருவி, அடிக்கடி தடுமாற்றம் அடைந்தாலும், அமளி ஓய்ந்த பொழுது, தாவீதின் திசை காட்டும் கருவியானது அவரது ஆவிக்குரிய (ஆதார) துருவத்தை - அவரது தேவனை - சுட்டிக் காண்பித்தது.*

*நாம் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற" மனிதர்களாக அல்லது மனுஷிகளாக எவ்வாறு ஆகக் கூடும்? தாவீது முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குப் பின் ஒருநாள் காலை வேளையில் திடீரென்று "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக" விழித்து எழுந்தாரா? இல்லை, அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற* சிறுவனாக *இருந்த காரணத்தினால் அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக ஆனார். தாவீது அரசராவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, தேவனிடமாய் அவர் தம் இருதயத்தைத் திருப்புவதைத் தொடங்கியிருந்தார்.*

*சாமுவேல், "கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்" (1 சாமு. 13:14) என்று கூறிய பொழுது, சவுல் அப்பொழுதுதான் அரசாளத் தொடங்கியிருந்தார். அப்பொழுது தாவீது பிறந்திருக்கக் கூட மாட்டார், அல்லது பிறந்திருந்தாலும், அவர் அப்பொழுது சிறு பிள்ளையாகவே இருந்திருப்பார்.[1] பல ஆண்டுகளுக்குப் பின், சவுல் அரசராயிராதபடி இரண்டாம் முறையாகப் புறக்கணிக்கப்பட்ட பிறகு, சாமுவேல், "கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் இராஜ்யத்தைக் கிழித்துப் போட்டு, உம்மைப் பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்" என்றார் (1 சாமு. 15:28). "உம்முடைய தோழன்" என்பது தாவீதைக் குறித்தது (1 சாமு. 28:17), ஆனால் தாவீது இன்னமும் ஒரு (வளர்ந்த) மனிதராயிருக்கவில்லை. அவர் தமது தந்தையின் ஆடுகளை மேய்க்கும் ஒரு பையனாகவே இருந்தார். இருப்பினும் அவரை, தேவனுடைய வசனத்தில் அதிகமாய்க் குறிப்பிடத் தக்கவராக்கிய அந்த பண்புகளை அவர் ஏற்கனவே மேம்படுத்திக் கொள்ளத் தொடங்கியிருந்தார்.*

*தாவீதைப் பற்றிய பாடத் தொடரை நாம் தொடங்கும் இவ்வேளையில், இவர் எவ்வாறு "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதராக" எழும்பத் தொடங்கினார் என்பதை நாம் காண்போம்.*

## நடக்கக் கற்றுக் கொண்ட மகன்

*தாவீது யூதா கோத்திரத்தில் இருந்து வந்தவராயிருந்தார். முற்பிதாவுக்கான யாக்கோபின் ஆசீர்வாதத்தில் (ஆதி. 49:8-12) யூதா ஒரு இராஜரீகக் கோத்திரம் என்று குறிப்பிடப்பட்டிருந்தார். இருப்பினும், வரலாற்றின் இந்தக் காலகட்டம் (தாவீதின் காலம்) வரையிலும் யூதா (கோத்திரம்) தன்னைத் தனிச் சிறந்ததாகக் காண்பிப்பதற்கு சிறிதளவே பணி செய்திருந்தது.*

*தாவீதின் பின்னணி பற்றி அதிகமான செய்தி ரூத் என்ற அழகிய சிறு புத்தகத்தில் காணப்படுகிறது. ரூத், தனது கணவனை இழந்த மோவாபியப் பெண்ணாயிருந்தாள்; அவள் தன் மாமியான நகோமியோடு யூதாவுக்குத் திரும்பினாள். அந்தப் புத்தகம் ரூத்துக்கும் போவாசுக்கும் ஏற்பட்ட காதலைப் பற்றிக் கூறுகிறது. ரூத்தும், போவாசும் திருமணம் முடித்துக் கொண்ட பின், அவர்கள் ஒரு மகனைப் பெற்றெடுத்தார்கள். பெண்கள் சூழ்ந்திருக்கையில் நகோமி அந்தக் குழந்தையைத் தனது மடியில் வைத்துக் கொண்டாள். "அயல் வீட்டுக்காரிகள், 'நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது' என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்" (ரூத் 4:17). அடுத்த ஐந்து வசனங்களில் (ரூத் 4:18-22) தாவீதின் எஞ்சிய வம்ச வரலாறு தரப் பட்டுள்ளது, இது யூதாவின் மகனான பேரேஸ் வரைக்கும் பின் செல்லு கின்றது (தாமார் பேரேசின் தாயாயிருந்தாள் ஆதி. 38).*

*தற்போதுள்ள எருசலேம் நகரில் இருந்து தென் மேற்கில் ஐந்து அல்லது ஆறு மைல் தொலைவில் இருந்த பெத்லெகேம் (ரூத் 1:2, 19, 22; 2:4; 4:11) என்ற மறைவான ஊரில் ரூத்தும் போவாசும் வாழ்ந்து வந்தார்கள். இங்கு அவர்களின் மகன் ஓபேதும், அவர்களின் பேரன் ஈசாயும் வாழ்ந்திருந்தார் கள் - மற்றும் அவர்களின் கொள்ளுப் பேரனான தாவீதும் இங்குதான் பிறந்தார்.*[2]

*பத்து பிள்ளைகளில் - எட்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் - தாவீது எல்லாருக்கும் இளையவராக இருந்தார்.*[3] *எல்லாருக்கும் இளையவன் பெரும்பாலும் மிகவும் செல்லம் பெறுபவனாயிருப்பான், ஆனால் தாவீதின் விஷயத்தில் இவ்வாறு இருக்கவில்லை. அவர்கள் அவருக்கு, "அன்பார்ந் தவர்" என்று அர்த்தம் தருகிற "தாவீது"*[4] *என்று பெயரிட்டார்கள், ஆனால் அது முதலாவது ஒரு தவறான பெயராகக் காணப்படுகின்றது. அவர் ஒரு பிள்ளையாயிருக்கையில் குடும்பத்தில் இருந்த பிறரால் மதிக்கப்படவில்லை (1 சாமு. 16:11). அவர் சிலரால் துடிப்புடன் வெறுக்கப்பட்டுமிருந்தார் (1 சாமு. 17:28).*

*அவரது குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தது.*[5] *போவாஸ் பல வேலைக்காரர்களுடன் செல்வச் செழிப்பில் இருந்தார், ஆனால் ஈசாயின் காலத்தில், குடும்பம் கஷ்டமான சூழ்நிலையில் இருந்தது என்பது உறுதி. "இனக்குழுவின் கோலில் தாழ்ந்த நிலையில் இருந்த மனிதர்" என்ற வகை யில் தாவீது, வேலைக்காரர்களால் செய்யப்படக் கூடியதான மந்தமான, கஷ்டமான, இழிவான வேலையைச் செய்யும்படி நியமிக்கப்பட்டார்.*[6]

*தாவீது, முக்கியமற்ற ஒரு கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த மதிப்பற்ற பிள்ளையாகவும், தமது சகோதரர்களால் கடிந்து கொள்ளப் பட்டவரும், மற்ற யாவரும் விரும்பாத வேலைகளில் பிணைக்கப்பட்ட வராகவும் இருந்தார். மனக் கசப்புடன் இருத்தல் என்பது அவருக்கு எவ்வளவு சுலபமாக இருந்திருக்கும்! தாவீது ஒரு கலகக்காரராக, தமது கீழ்ப்படியாமைக்காகத் தேவனையும் தமது குடும்பத்தையும் குற்றம் சாட்டுபவராக மாறியிருப்பது என்பது அவருக்கு எவ்வளவு சுலபமானதாக இருந்திருக்கும்! ஆயினும் தாவீதின் பதில்செயல் இவ்விதமாக இருந்த*

*தில்லை. மாறாக, ஒரு சிறுவனாயிருக்கையிலேயே தாவீது தேவனுடன் தினசரி நடப்பதைத் தொடங்கினார்.*

*இரண்டு நாட்களுக்கு முன் நான், ரோமானியாவில் இருக்கும் எனது பேத்தியான இராகேல் தற்பொழுது தான் நடக்கத் தொடங்கினாள் என்று அறிந்தேன். (இராகேல் ஏற்கனவே எல்லாவற்றிலும் துறுதுறுப்பாயிருப் பதாகவும் எனது மகளை அயர்ச்சியடையச் செய்வதாகவும் ஏற்கனவே எனது மகள் தெரிவித்திருந்தாள்!) நடக்கக் கற்றுக் கொள்ளுதல் என்பது எந்த ஒரு குழந்தையின் வாழ்விலும் உணர்வெழுச்சி ஊட்டக் கூடிய ஒரு மைல் கல்லாக உள்ளது. இருப்பினும் தேவனுடைய வழிகளில் நடக்கக் கற்றுக் கொள்ளுதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. அப்போஸ்தல ரான யோவான், "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்று எழுதினார் (3 யோவா. 4).*

*தாவீது தமது சிறு வயதிலேயே தமது வாழ்வை கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கும்படி அவர் மீது ஆதிக்கம் செலுத்திய எல்லாக் காரணிகளையும் நாம் அறிவதில்லை. நியாயப்பிரமாணத்தில் இருந்து அறிவுறுத்துதல்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது யூதப் பையன்களுக்கு வழக்கமான செயலாயிருந்தது. அத்துடன் கூடுதலாக, தாவீதின் குடும்பம் ஒன்றுகூடி வருகையில், இஸ்ரவேலை தேவன் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்குள் கொண்டு வந்து சேர்த்தது எப்படி என்பது பற்றிய அற்புதமான வரலாற்றை அவர் கேட்டிருக்கலாம். அவர் (தாவீது) தமது சொந்தக் குடும்பத்தின் முன்னோர்களான ரூத், போவாஸ், ஓபேது மற்றும் இப்பொழுது ஈசாயி மற்றும் அவரது பிள்ளைகளை ஆகியோரை தேவன் எவ்வாறு ஆசீர்வதித்திருந்தார் என்பது பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். இவற்றைத் தாவீது கவனித்துக் கேட்டபோது, தேவனுடைய வசனமானது ஏற்றுக் கொள்ளாத ஒரு நிலத்தில் (மத். 13:3-9, 18-23ஐக் காணவும்.) விழவில்லை. மாறாக, அது கர்த்தருக்குள் பலமான, நிலைத்து நிற்கிற, அசைக்கப்பட முடியாத விசுவாசமாக வளர்ந்தது.[7]*

*இவ்விடத்தில் எல்லாப் பெற்றோர்களும் பாடங்களைக் கண்டறிய முடியும். நாம் நமது பிள்ளைகளுக்கு ஆழமான ஆவிக்குரிய வேர்களைத் தரக் கடவோம். தேவனுடைய பரிசுத்த புத்தகத்தின் மீது அன்பு மற்றும் அதைப் பற்றிய அறிவு ஆகியவற்றைத் தருவதற்கு எந்த ஒரு வயதும், காலத்திற்கு மிகவும் முந்தியதாயிருப்பதில்லை (நீதி. 22:6; எபே. 6:4; முதலியன).*

*தனிநபர்கள் என்ற வகையில் நம் ஒவ்வொருவருக்கும் மற்ற (பல) பாடங்களும் இங்கு காணப்படுகின்றன. நாம் ஒவ்வொருவரும் நமது தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தவறுதலுக்கு, பிறரையோ அல்லது சூழ்நிலை களையோ நாம் குற்றம் சாட்ட இயலாது. இளைஞரோ முதியவரோ, நம்மில் ஒவ்வொருவரும் கூடியவரை விரைவில் யெகோவாவுக்கு தனிப்பட்ட ஒப்படைத்தலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. எஜமானருடன் நடக்கக் கற்றுக் கொள்வதற்கு காலம் தேவைப்படுகிறது.*

# வேலை செய்யக் கற்றுக் கொண்ட ஒரு மேய்ப்பன்

தாவீது ஆடுகளை கவனித்துக் கொண்டார் என்பது அவரது தொடக்க கால வாழ்வைப் பற்றி நாம் அறிகிற ஒரு உண்மையாக உள்ளது. ஈசாயி வேறு மகன் யாரையாவது கொண்டுள்ளாரா என்று சாமுவேல் கேட்ட பொழுது ஈசாயி, "எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" (1 சாமு. 16:11) என்று பதில் அளித்தார். "தாவீது ... திரும்பிப் போய் பெத்லகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்" (1 சாமு. 17:15) என்று நாம் வாசிக்கின்றோம். தாவீது சேனையில் இருந்த தம் மூன்று மூத்த சகோதரர் களுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற பொழுது, அவர்களில் ஒருவர் "வனாந்தரத்திலுள்ள அந்தக் கொஞ்ச ஆடுகளை நீ யார் வசத்தில் விட்டாய்?" (1 சாமு. 17:28; சங். 78:70-72ஐக் காணவும்) என்று பழி கூறும் வகையில் கேட்டார்.

ஆடுகளை மேய்க்கும் பையன் என்ற வகையில் தாவீதின் வரலாறு களைப் பற்றி வேதாகமத்தில் நாம் ஒன்றையும் காண்பதில்லை. இருப் பினும், நாம் தாவீதின் சங்கீதங்களில் இருந்தும் வேதாகமத்தின் பிற குறிப்புகளில் இருந்தும், அந்த தொழில் பற்றிய பிற ஆதார மூலங்களில் இருந்தும் அவரது அந்த வாழ்வைப் பற்றிய சித்தரிப்பொன்றை மீண்டும் காண்கின்றோம்.

ஆடுகளை மேய்த்தல் என்பது மதிக்கக் கூடிய தொழிலாயிருந்தது, ஆனால் அது தாழ்வானதாயிருந்தது.

ஆடுகளை மேய்த்தல் என்பது ஆடுகளைத் தவிர வேறு எந்தத் துணையுமில்லாத தனிப்படுத்தப்பட்ட வாழ்வாக, தனிமையான வாழ்வாக இருந்தது.[8]

ஆடுகளை மேய்த்தல் என்பது பொறுப்பு வாய்ந்த வாழ்க்கையாக இருந்தது. மேய்ப்பன் தனது ஆடுகளை அறிந்திருக்கவும் அவற்றைப் பராமரிப்பது எவ்வாறு என்பதை அறிந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அவன் பலஸ்தீனத்தின் பாதைகளை, புல்வெளிகள் எங்கிருந்தன என்பதை, அமர்ந்த தண்ணீர் எங்கிருந்தது என்பதை அறிந்திருக்க வேண்டியிருந்தது. அவன் காணாமற் போன ஆடுகளைத் தேட வேண்டியிருந்தது. அவன் வியாதியும் காயமும்பட்ட ஆடுகளைப் பேண வேண்டியிருந்தது. அவன் பெண்ணாடுகள் தங்கள் குட்டிகளை ஈனும் பொழுது அவற்றுக்கு உதவவும், ஆட்டுக்குட்டிகளை பராமரிக்கவும் வேண்டியிருந்தது (சங். 23; யோவா. 10:1-18; லூக். 15:4-6; சங். 78:71).

ஆடுகளை மேய்த்தல் என்பது கடினமான வாழ்வாயிருந்தது. தாவீது தமது ஆடுகளைப் பராமரித்துக் கொண்டிருந்ததைப் பற்றி நீங்கள் நினைக்கையில், அழகிய நீல வானத்தின் கீழ் அற்புதமான பசும் புல் வெளியை நீங்கள் காட்சியில் கண்டால், உங்கள் காட்சியை எரிக்கும் சூரியனுக்குக் கீழ் பாலைவனத்தில் புழுதியைக் கிளப்புகிற கீழ்க்காற்று பலமாய் வீசிக் கொண்டிருக்கும் யூதேயாவின் கரடுமுரடு வாய்ந்த

*மலைப்பகுதியை நோக்கி மாற்றிக் கொள்ளுங்கள். பலஸ்தீனத்தில் ஆடுகளை மேய்த்தல் என்பது சுட்டெரிக்கின்ற, புழுதி நிறைந்த, நாற்றமிக்க, பொதுவாக மதிக்கப்படாத வேலையாயிருந்தது.*

*ஆடுகளை மேய்த்தல் என்பது சில வேளைகளில் அபாயமிக்க வேலையாகவும் இருந்தது. மோட்டர் வண்டியில் எல்லா இடங்களுக்கும் சவாரி செய்கிற எனது நண்பர் ஒருவர், மோட்டர் வண்டி ஓட்டுதல் பற்றி, "மணிக்கணக்கில் அலுப்பூட்டும் - அவ்வப்போது முழுமையான பயங்கரம் வெடிக்கிற கணங்களைக் கொண்ட - வேலை" என்று விவரித்தார்.[9] இதே போல ஆடுகளை மேய்த்தல் பற்றி தாவீதும் கூறியிருக்கக்கூடும். அவர் ஆடுகளை "மரண இருளின் பள்ளதாக்கிலே" (சங். 23:4) இருந்த அபாயம் மிகுந்த கணவாய்களின் வழியே நடத்தியிருக்கக் கூடும். அவர், ஆடுகளைக் களவாட முயற்சி செய்த அருகில் இருந்த பெலிஸ்தர்கள் போன்ற திருடர்களிடமிருந்து ஆடுகளைப் பாதுகாக்க வேண்டியிருந்திருக்கும் (யோவா. 10:1). அவர், இளம் ஆடுகளையும் மந்தையில் இருந்த பலவீனமானவற்றையும் இரையாகக் கவர்ந்து செல்ல முயற்சி செய்த காட்டு மிருகங்கள் மற்றும் பெரும் பசிகொண்ட பறவைகள் ஆகியவற்றுடன் சண்டையிட வேண்டியிருந்திருக்கும். இந்த விலங்குண்ணிகளைப் பற்றித் தாவீது, அரசராயிருந்த சவுலிடம் பின்வருமாறு கூறினார்:*

> *உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறபோது, ஒரு விசை ஒரு சிங்கமும் ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டது. நான் அதைத் தொடர்ந்து போய், அதை அடித்து, அதை அதன் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்று போட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன் ... (1 சாமு. 17:34-36).*

*இளம் வயதுப் பையனாக, ஒரு சிங்கம் அல்லது கரடியின் முன் நேருக்கு நேராக நிற்பதைக் கற்பனை செய்து பாருங்கள்! நான் என்ன செய்திருப்பேன் என்று எனக்குத் தெரியாது. நான் ஓடும் பொழுது ஓரிடத்தில் அதிக நேரம் செலவிடுகின்றேன், எனக்கு நல்ல முறையில் (மரம்) ஏறத் தெரியாது. ஆயினும் இளம் வயதுப் பையனாக இருக்கையிலேயே தாவீது, இந்தக் கொடூரமான மிருகங்களை எதிர்த்து நின்று அவற்றைக் கொன்று போட்டார்! அவர் வைத்திருந்த ஆயுதங்கள் எவை? அவர் தம்மிடம் ஒரு கோல் (ஒரு ஈட்டியாகப் பயன்படுத்தக் கூடிய கனத்த தடி), அவரது கவண் (சங். 23:4; 1 சாமு. 17:40) - மற்றும் தேவன் மீது அவர் கொண்டிருந்த விசுவாசம் ஆகியவைதாம் அவரிடம் இருந்தன. "என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்பிவித்த கர்த்தர்" என்று அவர் கூறினார் (1 சாமு. 17:37).*

*தேவன் தமது மக்களை வழிநடத்திச் செல்வதற்கு யாரையாவது கண்ணோக்கும் பொழுது, ஊழியம் செய்விக்கப்படுகின்ற, சலுகை காட்டப்படும் இளந்தளிர் போன்றவர்களை கண்ணோக்குவதில்லை.*

*ஊழியம் செய்வதை அறிந்துள்ள, அது எவ்விதமான பொறுப்பு என்பதை அறிந்துள்ள, துன்பங்களைச் சகிக்கக் கூடிய, என்ன விலை செலுத்த வேண்டியிருந்தாலும் பணியைச் செய்யக் கூடிய ஒருவரையே தேவன் நாடுகின்றார். இவைகளே, பெத்லகேமிற்குப் புறம்பே தனித்த புல்வெளி களில் இருந்த தாவீது கற்றுக் கொண்ட பாடங்களாக இருந்தன. தாவீது, முதலில் ஆடுகளை மேய்ப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொண்ட பிறகு தான் இஸ்ரவேல் மக்களை மேய்ப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொண்டார்.*

> *[தேவன்] தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும், தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக் கொண்டு வந்தார். இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான் (சங். 78:70-72).*

*பொறுப்பு பற்றிய கருத்துணர்வு என்பது நம் நாட்களின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. பணியிடங்களில் நாம் பொறுப்பின் மையைக் கொண்டுள்ளோம். அயலகங்களில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம். அரசியலில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள் ளோம். திருமணங்களில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம். குடும்பங்களில் நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம். சபையில் கூட நாம் பொறுப்பின்மையைக் கொண்டுள்ளோம்.*

*நாம் ஒவ்வொருவரும் (இதை நமக்கென்று) தனிப்பட்ட வகையில் நடைமுறைக்குக் கொண்டு வருவோமாக. தனிநபர்கள் என்ற வகையில் நாம் பொறுப்பற்றவர்களாய் இருந்தால், நமது பொறுப்பற்ற தன்மையிலிருந்து நாம் மனந்திரும்பி, நமது வழிகளை மாற்றிக் கொள்வோம்! ஊழியம் செய்வது எப்படி என்பதை அறிந்து, பொறுப்பை ஏற்கக் கூடிய மக்களை மட்டுமே தேவன் பயன்படுத்த முடியும்!*

*நாம் பெற்றோர்களாயிருந்தால், பொறுப்புள்ள ஆண்களாகவும் பெண்களாகவும் இருப்பது எப்படி என்று நமது பிள்ளைகளுக்குப் போதிப்பதைக் காட்டிலும் சில விஷயங்களே அதிக முக்கியத்துவம் உள்ளவைகளாயிருக்கின்றன. பணி செய்வது எப்படி என்று நாம் நமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்போமாக (இ.வ. 2 தெச. 3:10). அவர்களுக்கு நாம் பொறுப்புகளைக் கொடுப்போமாக! நியமிக்கப்பட்ட பணிப்பொறுப்புகளுக்கு நாம் அவர்களைப் பொறுப்பாளிகளாக்கு வோமாக! கர்த்தரால் அவர்கள் பயன்படுத்தப்படும்படி நாம் அவர்களைத் தயார் செய்வோமாக!*

## காத்திருக்கக் கற்றறிந்த மகாராஜா

*இறுதியாக நாம் 1 சாமுவேல் 16ம் அதிகாரத்தைக் கண்ணோக்கத் தயாராகிறோம். இது வரையிலும், 1 சாமுவேல் புத்தகத்தில் தாவீதைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. சவுல் என்ற பெயர் கொண்ட பகட்டுமிக்க ஒரு அரசர் மீதே கவனம் இருந்து வந்துள்ளது. இருப்பினும், சவுலின் ஆட்சியானது வெறுப்புக்கு உரியதாகிப் போயிருந்தது. சவுல் தேவனைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக தமது சுய ஞானத்தையும் பலத்தையும் சார்ந்திருந்தார். அவரது ஆட்சியின் தொடக்கத்தில், அவர் தமது படைகளில் தோல்விக்குப் பயம் அடைந்தவராக கர்த்தர் கட்டளைப்படி சாமுவேலுக் காகக் காத்திருப்பதற்குப் பதிலாக தாமே தகன பலி ஒன்றைச் செலுத்தினார் (1 சாமு. 13:13). பிற்பாடு, தேவன் அறிவுறுத்தியிருந்தபடி அமலேக்கியரை முற்றிலுமாக அழிப்பதற்குப் பதில், அவர்களின் அரசனை உயிரோடு விட்டு வைத்து, அவர்களின் மிருகங்களில் மிகச் சிறந்தவற்றையும் விட்டு வைத்திருந்தார் (1 சாமு. 15:2, 3, 9). பின்பு சாமுவேலிடம் தேவன், "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான்" என்றார் (1 சாமு. 15:11). சவுலை ராஜாவாக அபிஷேகம் செய்தவராயிருந்த சாமுவேல் மனம் உடைந்து போனார், ஆனால் அவர் கர்த்தரின் செய்தியை சவுலுக்கு அறிவித்தார்: "கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு, உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார்" (1 சாமு. 15:28). ஒன்று சாமுவேல் 16ம் அதிகாரம் அடுத்த ராஜா அபிஷேகம் செய்விக்கப்படுதலைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் கூறுகின்றது.*

*இராமாவில் கவலைமிக்க கண்களுடன் இருந்த சாமுவேலிடம் கர்த்தர் வந்தார் (1 சாமு. 15:34; 7:17). "இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்த மட்டும் துக்கித்துக் கொண்டிருப்பாய்; நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டுவா; பெத்லெகேமியனான ஈசாயிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்து கொண்டேன் என்றார்" (16:1). படைக்குச் சென்று ஒரு போர்வீரனைக் காணும்படி தேவன் சாமுவேலிடத்தில் கூறவில்லை. தீர்க்கதரிசிகளின் பள்ளி ஒன்றிற்குச் சென்று ஒரு மேதையைத் தெரிந்துக் கொள்ளச் சொல்லவில்லை. பெரிய நகர் ஒன்றிற்குச் சென்று மக்கள் தலைவர் ஒருவரைக் காணும்படி அவர் கூறவில்லை. மாறாக, அவர் சிதைவுற்ற பாதையில் இருந்த சின்னஞ்சிறு கிராமம் ஒன்றுக்கு - மிகவும் ஏழ்மையானவர்கள் வாழ்கின்ற அந்த கிராமத்திற்கு - செல்லுமாறு கூறினார்.[10] தேவனுடைய வழிகள் நமது வழிகளாயிருப்ப தில்லை (ஏசா. 55:8, 9).*

*இருப்பினும், சாமுவேல் சவுலுக்கு ஏதோ ஒரு வகையில் பயந்தார்.[11] கர்த்தரிடத்தில் அவர், "நான் எப்படிப் போவேன்? சவுல் இதைக் கேள்விப் பட்டால், என்னைக் கொன்று போடுவானே" (16:2) என்று கேட்டார். சவுல் (தாம்) ராஜாவாயிராதபடி மாற்றி வேறு நபர் அவ்விடத்தில் வைக்கப்படு*

வதாகக் கேள்விப்பட்டதிலிருந்து, அரியணைக்குத் தம்மிடம் அறைகூவல் விடக் கூடியவர் யார் என்பதைக் கண்ணோக்கிக் கொண்டிருந்தார். சாமுவேலிடம் தேவன், "நீ ஒரு காளையைக் கையோடை கொண்டு போய், 'கர்த்தருக்குப் பலியிட வந்தேன்' என்று சொல்லு" (16:2ஆ) என்று கூறினார். தேவன் சாமுவேலைப் பொய் சொல்லச் சொன்னாரா? இல்லை, சாமுவேல் காளையைக் கொண்டு போய் பலியிட்டார் (16:4, 5). தனிப்பட்ட சில நிகழ்ச்சிகளில் நமது முதன்மை நோக்கத்தை மறைத்து, துணை நோக்கத்தை வெளிப்படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் உள்நாட்டு யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக மற்றும் சாமுவேலையும் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவரையும் காப்பாற்றுவதற்காக இரகசியம் அவசியமாயிருந்தது.

தேவன் தமது அறிவுறுத்துதல்களைத் தொடர்ந்தார்: "ஈசாயைப் பலிவிருந்துக்கு அழைப்பாயாக; அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்; நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம் பண்ணுவாயாக என்றார்" (16:3).

சாமுவேல் ஒரு கொம்பை தைலத்தினால் நிரப்பிக் கொண்டு, ஒரு காளையை நடத்திக் கொண்டு தெற்கு முகமாய் பெத்லெகேம் நோக்கிச் சென்றார். அவர் அந்த கிராமத்தைச் சென்றடைந்தபோது, "அவ்வூரின் மூப்பர்கள் தத்தளிப்போடே அவனுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்" (16:4அ). சாமுவேல் இன்னமும் ஒரு நியாயாதிபதியாகச் செயல்பட்டு வந்தார் (1 சாமு. 7:15). பெத்லெகேம் அவரது வட்டாரத்திற்குள் இருந்த தில்லை (1 சாமு. 7:16), எனவே புகழ்மிக்க அந்த நியாயாதிபதி இந்த அமைதியான குக்கிராமத்தினு ள் திடீரென்று வருகை தந்த பொழுது, அந்த நகர அலுவலர்களின்/கிராம மூப்பர்களின் மனங்களில் முதலில், பெத்லெகேமியர் யாரேனும் மாபெரும் தவறு செய்து விட்டார்களோ என்ற கேள்விதான் கடந்து வந்தது. ஒருவேளை அந்த கிராமம் முழுவதும் தண்டிக்கப்படலாம். பயந்து நடுங்கிய அந்த கிராமத்தின் மூப்பர்கள், "நீர் வருகிறது சமாதானமா?" என்று கேட்டார்கள் (16:4ஆ). சாமுவேல், "சமாதானந்தான்; கர்த்தருக்குப் பலியிட வந்தேன்" என்று பதில் கூறினார் (16:5அ).

கிராமத்து மூப்பர்கள், தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு[12] பலிவிருந்துக்கு வருமாறு சாமுவேல் அழைத்தார் (16:5ஆ). பலியொன்று செலுத்தப்படுகையில், கொல்லப்பட்ட விலங்கின் உடலிலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்ட சில உறுப்புக்கள் மட்டுமே காணிக்கையாய்ச் செலுத்தப் பட்டு வந்தது, எஞ்சியுள்ள பகுதி உண்ணப்பட்டது (1 இரா. 19:21). பெத்லெகேமில், இஸ்ரவேலினால் மிகச் சிறந்தவர் என்றறியப்பட்ட மனிதரால் நிறைவேற்றப்படும் பண்டிகையொன்று நடைபெற வேண்டி யிருந்தது, மற்றும் இந்த முக்கியமான மனிதர்கள் அழைக்கப்பட்டிருந் தார்கள். உறக்கத்திலிருந்த இந்தச் சிறு நகரில் நடந்த இந்நிகழ்ச்சியானது அநேகமாக மிகவும் எழுச்சிக்குரியதாக இருந்திருக்கும்.

சாமுவேல் அவர்களிடத்தில், ஈசாயையும் அவரது மகன்களையும் அழைக்கும்படியும் கூறினார் (16:5இ).[13] இந்த அழைப்பினால் ஈசாய் பெற்றிருந்திருக்கக் கூடிய வியப்பையும் மகிழ்ச்சியையும் கற்பனை செய்து

*பாருங்கள்! அவரது தாத்தாவான போவாஸ், அந்த சமூகத்தில் ஒரு காலத்தில் மிகவும் மதிப்புக்குரிய மனிதராய் இருந்தார். ஒருவேளை, நிறைவாக அந்த மதிப்பு இவருக்கு வந்து சேர வேண்டிய காலம் வந்திருக்கலாம்! ஈசாய் தனது பையன்களை (ஏறக்குறைய எல்லாப் பையன்களையும்) குளிக்கச் செய்து, "சபைக்குச் செல்லும் பொழுது அணிபவற்றில்" மிகச் சிறந்த உடைகளை அணிவித்து, இவ்விதமாக அவர்கள் எல்லாரும் அந்த வைபவத்திற்குச் சென்றார்கள்.*

*விருந்து நடந்து கொண்டிருந்த இடத்திற்கு அவர்கள் நடந்து செல்லுகையில் சாமுவேல், ஈசாயின் மூத்த மகனான எலியாபைப் பார்த்தார்.[14] அவர் உயரமாகவும் வனப்பாகவும் இருந்தார்,[15] அவர் ஒரு ராஜாவைப் போல் காணப்பட்டார். சாமுவேல், "கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் இவன்தானாக்கும்" என்று நினைத்தார் (16:6).*

*இப்பொழுது நாம் 1 சாமுவேல் புத்தகத்தில் உள்ள மிகவும் முக்கிய மான வசனத்திற்கு வருகின்றோம்: " 'நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்' என்றார்" (16:7). "முகம்" என்ற வார்த்தை, எபிரெய மூலமொழியில் "கண்கள்" என்பதைக் குறிப்பதற்கான வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இது முகத்தைக் குறிப்பதற்கான உருவக நடையாக உள்ளது.*

*தோற்றத்தைக் கொண்டு மனிதர் (கள்) தீர்ப்பிடுகின்ற விஷயமானது அன்றும் இன்றும் உண்மையானதாகவே உள்ளது. நமது பிரசங்கியார்கள், பிரசங்கியார்கள் போல் காணப்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் (என் மனைவி என்னைக் குறித்து இதை இன்னமும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்). நமது பணியாளர்கள் பணியாளர்களாக இருப்பதையே நாம் விரும்புகிறோம். நமது அதிபர்கள் அதிபர்கள் போலிருப்பதையே நாம் விரும்புகின்றோம். நபரைக் காட்டிலும் அவர் பொதிந்து வைக்கப்பட்டுள்ள நிலை என்பது பல வேளைகளில் நமக்கு மிகவும் முக்கியமானதாகி விடுகின்றது.*

*ஆயினும் கூட, மனிதர்கள் தங்களின் (பதவித்) தகுதிக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளாததின் காரணமாக நாம் எவ்வளவு அடிக்கடி ஏமாற்றம் அடைந்து போகின்றோம்? அழகு மிகுந்த முகமானது ஒரு நல்ல மனைவியாக அவள் இருப்பாள் என்பதை உத்தரவாதப்படுத்துவதில்லை என்பதைக் கண்டறிந்து ஏமாற்றமடைகிற இளைஞர்கள் பலர் உள்ளனர். வனப்புமிக்க விவரக் குறிப்பு ஒன்றினால் ஊசலாட்டப்பட்டதின் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட இளம் பெண்கள் தங்கள் இருதயம் உடைந்து போயிருக்கின்றார்கள்.*

*தேவன் தமது முடிவுகளை மேலோட்டமாக, மேலெழுந்தவாரியாக அமைப்பதில்லை. மாறாக அவர் இருதயத்தை உற்றுப் பார்க்கின்றார்.[16] "நியாயம்தீர்ப்பது எப்படி என்று நியாயாதிபதி தன் நியாயாதிபதிக்குப் போதித்துக் கொண்டிருந்தார்"[17] என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். நாம் எப்படி நியாயம் தீர்க்க வேண்டும் என்பதையும் தேவன் நமக்குப்*

போதிப்பார். இயேசு, "தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" என்று கூறினார் (யோவா. 7:24).[18]

ஈசாயி தமது இரண்டாவது மகன் அபினதாபை அழைத்தார், அந்த மகனும் உயரமாகவும் வனப்பாகவும் இருந்தார் என்பதில் ஐயம் இல்லை. சாமுவேல் தமது தலையை ஆட்டி, "இவனையும் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை" (16:8) என்று கூற வேண்டியதாயிற்று. அதன் பின் மூன்றாவது மகன் சம்மாவின் முறை வந்தது. பதில் அதே விதமாகவே இருந்தது: "இவனையும் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை" (16:9). தொடர்ந்து அவர்கள் வந்தார்கள்: நெதனெயேல் ... ரதாயி ... ஒத்சேம் (1 நாளா. 2:14, 15) சாமுவேலுக்கு முன்பாக ஏழு மகன்களும் கடந்து சென்றார்கள் - அந்த ஏழு பேரும் பார்வைக்கு நல்ல பையன்களாக, ராஜ களை உள்ளவர்களாக இருந்தார்கள் - ஆனால் "கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்து கொள்ளவில்லை" என்பதே முடிவாயிருந்தது (16:10).

சாமுவேல் கலக்கம் அடைந்தார். தேவன், ஈசாயின் மகன்களில் ஒருவரை ராஜாவாகத் தெரிந்து கொண்டதாகக் கூறியிருந்தார் (16:1). பலிவிருந்திற்கு ஈசாயின் மகன்கள் யாவரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். சாமுவேல் ஈசாயியைப் பார்த்து, "உன் பிள்ளைகள் இவ்வளவுதானா?" (16:11அ) என்று கேட்டார். ஈசாயி பதில் அளிக்கையில் சங்கடமுற்றவராய் இருந்திருக்க வேண்டும். "இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" (16:11ஆ). எபிரெயக் கல்வியாளர்கள், "எல்லாருக்கும் இளைய" என்ற சொற்பதத்தை கடைசியாகப் பிறந்தவருக்கு மட்டுமின்றி தகுதியில் கடைசியாயிருப்பவருக்கும் கூறுவதுண்டு.

பலிவிருந்திற்குத் தாவீது அழைக்கப்படாதிருந்தது ஏன்? ஆடுகளைக் கவனித்துக் கொள்வதற்கு யாரேனும் ஒருவரைக் கூலிக்கு அமர்த்துவதென்பது வசதிக் குறைவானதாக இருந்திருக்கலாம், ஆனால் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்காக அதுபோலச் செய்திருக்கப்படக் கூடும் (1 சாமு. 17:20ஐக் கவனிக்கவும்). எல்லா மகன்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஈசாயி தாவீதை கொண்டு வராதது ஏன்?[19]

இது ஒருவேளை, தாவீது வேறுபட்டவராய் இருந்ததால் இவ்வாறு நடந்திருக்கலாம். அவர் "சிவந்த மேனி" (16:12) கொண்டவராயிருந்தார். "சிவந்த மேனி" என்பது, "சிவப்பு" என்பதற்கான எபிரெய வார்த்தையில் இருந்து வருகிறது; இதே வார்த்தைதான் சிவந்த முடி போர்த்தப் பட்டவனாகப் பிறந்த ஏசாவுக்கும் பயன்படுத்தப்பட்டது (ஆதி. 25:25). தாவீதின் உடல் உருவாக்கத்தில், அவரது முன்னோர்களில்[20] சிலருடைய அயல் உயிர் மூலக்கூறுகள் மேலெழுந்திருக்கலாம். "சிவந்த மேனி" என்பது, தாவீது அழகிய தோற்றம் கொண்டிருந்தான் என்று மட்டும் அர்த்தப் படுத்தியிருக்கலாம் - அல்லது இது, அவர் சிவந்த தலை(முடி)யும், தவிட்டு நிறமான முகமும் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படலாம். எவ்வகையிலும், அவர் யூதர்களின் சாதாரண தர அளவையான உருவாக்கத் திற்கு பொருத்தமானவராகக் காணப்படவில்லை.

தாவீது வேறுபட்டவராகத் தோற்றம் அளித்ததுடன் கூட, அவர் வேறு

*பட்டவராக செயல்பட்டுக் கொண்டும் இருந்தார். அவர் உண்மையான மனிதரில் மனிதன் போலச் செயல்படவில்லை. அவர் கவிதை எழுதிக் கொண்டும், ஒரு கம்பிக் கருவியில் இசை மீட்டிக் கொண்டும் இருந்தார்![21] வேறுபட்டவராயிருத்தல் என்பது மரணத்திற்கேதுவானதாக உள்ளது.*

*தாவீதைப் பற்றி நினைக்கையில் எனக்கு, "குட்டிச் சுவற்றுக் கழுதை" என்ற சொற்றொடர்தான் நினைவுக்கு வருகின்றது. ஒரு பெண் நாய் தன்னால் கவனிக்கக்கூடிய அளவுக்குமேல் குட்டிகளை ஈன்றெடுத்த நிலையில், மிகச் சிறிய குட்டி புறம்பே தள்ளப்படுகின்றது. அது பெரிய குட்டிகளின் வயிறுகள் நிறைந்த பின்பு எஞ்சியிருக்கும் பாலைக் குடித்து, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ வேண்டியதாக உள்ளது. (ஆனால்) பெரும்பாலும் இந்தக் குட்டியானது மிகப் புத்திசாலியாக - மற்றும் மிகவும் வலிவானதாக - வளருகிறது, ஆனாலும் அது, "வளர்ச்சி குன்றிய நிலையில்" இருத்தல் என்ற தழும்பை உடையதாகவே இருக்கின்றது.*

*தாவீதுக்கு உணவும் உடையும் தரப்பட்டது என்பதில் ஐயம் எதுவும் இல்லை, ஆனால் அவரது சொந்தக் குடும்பத்தில், அன்பு, மதிப்பு மற்றும் பாராட்டு ஆகியவைகளில் - ஒவ்வொரு பிள்ளையும் இவற்றில் பேணப்பட வேண்டியவர்களாயிருக்கின்றனர் - அவர் ஒரு புறமாய் ஒதுக்கப்பட்டார். பிற்பாடு தாவீது, "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்" (சங். 27:10) என்று எழுதினார். தாவீது ஓரளவுக்காவது தமது குடும்பத்தாரால் கைவிடப்படாது இருந்திருந்தால், இப்படிப்பட்ட வார்த்தைகளை எதற்காக எழுதியிருக்கப் போகிறார்?[22] நாம் யாவரும் பெற்றோர் என்ற முறையில் நமது பிள்ளைகளை நேசிக்கிறோம் மற்றும் மதிக்கிறோம் என்பதை அவர்கள் அறிய அனுமதிக்கவும் - பட்சபாதத்தைத் தவிர்க்கவும் தேவன் நமக்கு உதவி செய்கிறார்!*

*பலி விருந்துக்கு ஈசாய் தாவீதை அழைத்து வராமைக்கான உண்மைக் காரணம் நமக்குத் தெரியவில்லை,[23] ஆனால் ஒரு விஷயம் தெளிவா யிருந்தது: ஈசாயி தமது மூத்த மகன்களைப் பற்றி நினைத்த அளவுக்குத் தமது இளைய (கடைசியான) மகனைப் பற்றி நினைக்கவில்லை. தாவீது, பின்னால் இருந்த புல் வெளியில் விடப்பட்டிருந்தார்.*

*சாமுவேல் சந்தோஷமில்லாத நியாயாதிபதியாக இருந்தார்! அவர் ஈசாயிடம், "ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன்" (16:11இ) என்றார்.*

*ஒரு செய்தியாளர் ஓடி வந்து, "தாவீது, தாவீது, உன்னைப் பலி விருந்துக்கு அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்கள்" என்று கூறிய பொழுது, தாவீதுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய திகைப்பைக் கற்பனை செய்து பாருங்கள்.*

*தாவீதினால் தமது காதுகளை நம்ப இயலாதிருந்தது. "ஆனால், ஆடுகளை என்ன செய்வது?"*

*"அவற்றைப் பற்றிக் கவலைப்படாதே, அவை நன்றாகவே இருக்கும்."[24]*

*"சரி, நான் குளித்து விட்டு, உடைமாற்றிக் கொண்டு பிறகு உன்னுடன் வருகிறேன்."*

*"இல்லை, நீ இப்பொழுதே வரவேண்டும். நீ அங்கு வரும் வரைக்கும் எவரொருவரும் உணவு உண்பதற்கு உட்காரக்கூட அனுமதிக்கப்பட மாட்டார்கள்!"*

*தாவீது, அழுக்கும் வியர்வையுமாக, மேய்க்கும் பொழுது அவர் அணிந்திருந்த உடையிலேயே, ஆடுகளைப் போலவே நாற்றம் கொண்டவராக பலிவிருந்திற்கு வந்து சேர்ந்தார் - ஆயினும் அவரிடம் சிறந்த அம்சம் ஒன்று இருந்தது. "அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுமுள்ளவாயிருந்தான்" (16:12அ). ஆயினும் தாவீதின் நல்ல தோற்றப் பொலிவு அவர் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு காரணமாயிருந்த தில்லை. அவரின் இருதயமே அதற்குக் காரணமாயிருந்தது; தேவன் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதரைக் கண்டறிந்தார். கர்த்தர் சாமுவேலிடம், "இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு" என்றார் (16:12ஆ).*

*சாமுவேல் தாவீதைத் தமக்கு முன்பாக மண்டியிடும்படி கூறினார். அவர் கொம்பை தாவீதின் தலைக்கு மேலாக உயர்த்தி, அதில் இருந்த இனிய நறுமணமுள்ள தைலம் தாவீதின் கன்னங்களில் வழிந்தோடி, அவரது உடைகளின் மீது வடிந்து, தரையில் விழும் வரையிலும் அதை, காற்றினால் அலைக்கழுக்கப்பட்டிருந்த தாவீதின் தலைமுடியின் மீது ஊற்றினார் (16:13அ). பின்பு சாமுவேல் குனிந்து, தாவீதின் காதுகளில், "நீ அடுத்த ராஜாவாயிருப்பாய்" என்று சொன்னதாக யோசிப்பஸ் என்பவர் கூறினார்.[25] அது அவ்வாறு நடந்ததோ இல்லையோ, சிறப்பான ஏதோவொன்று நடந்தது என்பதைத் தாவீது அறிந்தார்.[26]*

*"அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்" (16:13ஆ). பழைய ஏற்பாட்டின் காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் உபதேசம் மேம்படுத்தப்பட்டிராதபடியால், இது அநேகமாக தேவத்துவத்தின் மூன்றாம் ஆளைக் குறிப்பிடுவதாயிராமல், தேவனுடைய சொந்த ஆவியையே குறிப்பிடுகின்றதாயிருக்கலாம். அந்த வேளை முதற்கொண்டு. விசேஷித்த ஒரு வகையில் தேவன் தாவீதுடன் இருப்பார்.[27] இதன் விளைவாகத் தாவீது தமது சங்கீதங்களை எழுதுகையில் கர்த்தருடைய வழிநடத்துதல் அவருடன் இருந்திருக்கும் (2 சாமு. 23:1, 2).*

*வசனம் 13, "... சாமுவேல், தைலக் கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்" என்று குறிப்பிடுகின்றது. அங்கு நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை அநேகமாக அவரது சகோதரர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் (ஏனெனில் இதற்கு முன் ஒருமுறை மாத்திரமே ராஜாவுக்கு அபிஷேகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றிருந்தது, மற்றும் அது தனிப்பட்ட நடந்த நிகழ்ச்சியாக இருந்தது - இ.வ. 1 சாமு. 10:1). இருப்பினும் அவர்கள், அந்தச் "சிறுவன் தங்களுக்கு மேலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும், ஏதோ ஒரு கனத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டதையும்" அறிந்திருந்தார்கள்.[28]*

*சாமுவேலின் வேலை முடிவடைந்தது, அவர் தம் இல்லம் திரும்பினார் (16:13).*

*தாவீது என்ன செய்தார்? அவர் கிரீடங்களையோ அல்லது ராஜ*

உடைகளையோ அணிய முயற்சி செய்தாரா? அவர் தமக்கென்று புதிய வர்த்தக அட்டைகளை (விசிட்டிங் கார்டுகள்) அச்சிட்டுக் கொண்டு, அதில் “ ‘மேய்ப்பன்’ என்றிருந்ததை அடித்து விட்டு ‘ராஜா’ என்று எழுதிக் கொண்டாரா?” அவர் தமது குடும்ப சாரட்டு வண்டியைப் பளபளப்பாக்கி, வீதிகளின் வழியே “நானே உங்கள் புதிய ராஜா” என்று சத்தமிட்டுக் கொண்டு ஓட்டிச் சென்றாரா?[29] இல்லை, தாவீது தம் ஆடுகளிடம் திரும்பிச் சென்றார். பிற்பாடு சவுல் தாவீதை அனுப்பும்படி ஈசாயிக்கு அனுப்பிய செய்தி, “ஆட்டு மந்தையில் இருக்கிற உன் குமாரனாகிய தாவீதை என்னிடத்தில் அனுப்பு” (16:19) என்பதாகவே இருந்தது. அவர் சவுலுக்காக இசை மீட்டத் தொடங்கிய போது கூட, அவர் “(தாவீது) சவுலை விட்டுத் திரும்பிப் போய் பெத்லெகேமிலிருக்கிற தன்னுடைய தகப்பனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்.” (1 சாமு. 17:15; 1 சாமு. 17:20, 28ஐயும் காணவும்.)

தாவீது ஒரு மகா ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார்; அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாவாயிருந்தார், ஆனால் அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராகவும் இருந்தார். அவர் தேவனுடைய வேளைக்காகவும், இடத்திற்காகவும் காத்திருக்கக் கூடியவராயிருந்தார். அவர் தமது ஆடுகளிடம் திரும்பிச் சென்றார்.

நாம் தேவனுக்காகக் காத்திருக்க, பொறுமையுடன் இருக்கக் கற்றுக் கொள்வது அவசியமானதாக உள்ளது. கற்றுக் கொள்ள இது எவ்வளவு முக்கியமான ஒரு பாடமாக உள்ளது! கற்றுக் கொள்ள இது எவ்வளவு கடினமான பாடமாக உள்ளது! தேவனால் பயன்படுத்தப்படும்படி நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்வோம் - பின்பு நாம் காத்திருக்கக் கற்றுக் கொள்வோம்.

## ஆராதிக்கக் கற்றுக் கொண்ட ஒரு பாடகர்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மேய்ப்பனான ராஜா, புல்வெளியில் இருந்து அரியணைக்கு எவ்வாறு மாறி வந்தார்? சாதாரணமாக, ஒரு மேய்ப்பர் ஒருக்காலும் அரண்மனையில் உட்புறத்தைப் பார்த்தே இருக்க மாட்டார், ஆனால் தேவன் ஆச்சரியமான வழிகளில் இயக்குவிக்கின்றார். அதிகாரம் 16ன் முடிவுப் பகுதியானது, தேவன் இதை எவ்வாறு செய்து முடித்தார் என்று நமக்குக் கூறுகின்றது.

ஆடுகளை மேய்க்கும் பையன் என்ற வகையில், தாவீது ஒரு தனித் திறமையை வளர்த்துக் கொண்டிருந்தார், அதைப் பற்றி நாம் சுருக்கமாய்க் கூறியிருந்தோம். அவர் ஆடுகளை மேய்க்கையில் பாடவும் இசைக் கருவியை இசைக்கவும் கற்றுக் கொண்டிருந்தார்.

ஆடுகளைப் பராமரித்தல் என்பது நீண்ட நேரம் செலவிட வேண்டிய ஒரு வேலையாக இருந்தது. அவற்றில் பல மணி நேரங்கள் மந்தமான, சோர்வூட்டும் வேளைகளாயிருந்தன. ஆடுகள் புல்வெளியில் பாதுகாப்பாக மேய்ந்து கொண்டிருக்கையில், மேய்ப்பன் அவற்றை ஒரு குன்றின் ஓரமாக

அமர்ந்து கவனித்தாலே போதுமானதாயிருந்தது. மேய்ப்பர்கள் ஒரு இசைக் கருவியை இசைத்துப் பொழுதுபோக்குவதென்பது சாதாரணமான தாயிருந்தது. அவர்களில் பெரும்பாலோர் ஒரு எளிய குழலையோ அல்லது புல்லாங்குழலையோ தேர்ந்து கொள்வார்கள். தாவீது ஒரு கம்பியிசைக் கருவியைத் தேர்ந்து கொண்டார். NASBயும் பிற மொழிபெயர்ப்புகளும் இதை "சுரமண்டலம்" (16:23) என்று அழைக்கின்றன, ஆனால் இதே போன்றதும். ஒரு சில கம்பிகளைக் கொண்டதுமான "நரம்பிசைக்கருவி" என்பதே மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாயிருக்கும் (RSVயைக் காணவும்). (இது சுரமண்டலம் மற்றும் கித்தார் ஆகிய இசைக் கருவிகளுக்கிடையிலான ஒரு கலவையான இசைக் கருவியென்று அழைக்கப்பட்டுள்ளது).

தாவீது பாறைக் குன்றுகளின் மீது தனிமையிலிருந்த அந்த நாட்களில், பாடல்களை எழுதி அவற்றிற்கு இசையமைத்திருந்தார். பின்பு அவர் இசைக் கருவிகளை மீட்டிக் கொண்டே அவற்றைப் பாடுவார். தேவன் தாவீதை அழகிய குரலையும் இசைத் திறமையையும் கொடுத்து ஆசீர்வதித்திருந்தார், அந்தத் திறமையைத் தாவீது வளர்த்துக் கொண்டார். இந்த அத்தியாயத்தின் அடுத்த பகுதிக்குக் கடந்து செல்லுகையில் இதை நாம் மனதில் வைத்துக் கொள்வோம்.

வசனம் 14, "கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்" என்று தொடங்குகிறது. அத்தியாயம் 16ன் கடைசிப் பாதியானது தாவீதையும் சவுலையும் வேறுபடுத்தி ஒப்பிடுகின்றது. தாவீது தேவனால் அங்கீகரிக்கப் பட்ட அடுத்த இராஜா என்பதைக் காண்பிக்க, கர்த்தருடைய ஆவி அவர்மீது வந்தது (16:13). அதே வேளையில், சவுல் ராஜாவாயிராதபடிப் புறக்கணிக்கப்பட்டார் என்பது முடிவானது என்பதைக் காண்பிக்க அவரை விட்டு கர்த்தருடைய ஆவி நீங்கிப் போயிற்று.[30]

இருப்பினும் இதற்குப் பின்பு நாம் பின்வரும் புதிரான கூற்றை வாசிக்கின்றோம்: "தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி அவனை [அதாவது, சவுலை]க் கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தது" (16:14ஆ). இங்கு "பொல்லாத" என்பது "பாவம் நிறைந்த" என்று அர்த்தப்படுவதில்லை, மாறாக "தண்டிக்கின்ற" என்று அர்த்தப்படுத்துகின்றது. பழைய ஏற்பாடானது தண்டித்தலைக் குறிப்பிட அடிக்கடி "பொல்லாத" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது.[31] NKJVயில் இது "அயர்ச்சியூட்டும் ஆவி" என்றுள்ளது. "தேவனால் விடப்பட்ட" என்பது, சவுலைத் தண்டிப் பதற்காக, இந்த ஆவியைத் தேவன் நேரடியாக அனுப்பினார் என்றோ அல்லது (யோபின் விஷயத்தில் நடந்தது போன்று) சவுலைத் துன்புறுத்து வதற்கான தமது கருவியாகத் தேவன் சாத்தானைத் தம்முடைய ஊழியக் காரர்களில் ஒருவனாக அனுப்ப அனுமதித்தார் என்றோ அர்த்தம் கொள்ளப்பட முடியும். எவ்வகையிலும், தேவனுடைய தீர்மானம்/ நோக்கம் நலமாயிருந்ததென்று நாம் உறுதி கொள்ள முடியும். சவுலைக் கர்த்தரிடத்தில் திரும்பக் கொண்டு வருவதற்காக அவர் சிட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்.[32]

பொல்லாத ஆவி சவுல் மீது வந்த பொழுது, அதன் விளைவு அவரைச் சுற்றிலும் இருந்தவர்களால் தெளிவாய்க் காணப்பட்டது (16:15). சவுல்

எப்பொழுதுமே ஓரளவு நிலையற்றவராகவே இருந்தார், ஆனால் அந்தப் பொல்லாத ஆவியானது அவரது உணர்வுகளின் ஊசலாட்டத்தை வலுப்படுத்திற்று; மேலும் மேலும் அவர் ஆழமான மனச்சோர்வின் கீழிருக்கலானார். சவுலின் ஆலோசனையாளர்கள் அவரிடத்தில் பின்வரும் பரிந்துரையை எடுத்துரைத்தார்கள்: "சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறின ஒருவனைத் தேடும்படிக்கு, எங்கள் ஆண்டவனாகிய நீர் உமக்கு முன்பாக நிற்கிற உம்முடைய அடியாருக்குக் கட்டளையிடும்; அப்பொழுது தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி உம்மேல் இறங்குகையில், அவன் தன் கையினால் அதை வாசித்தால், உமக்குச் சவுக்கியமுண்டாகும்" (16:16). "காட்டுத்தனமான இருதயத்தை மென்மைப்படுத்தும் வசீகரம் இசைக்கு உண்டு"[33] என்று கூறப்படுகிறது. அது சவுலின் நாட்களில் உண்மையா யிருந்தது, மற்றும் வியாபாரி ஒருவர் மெல்லிசையைக் கேட்டு தனது இறுக்கத்தை தளர்த்தி ஓய்ந்திருப்பதையோ அல்லது தாயானவள் தனது பிள்ளைகளுக்குத் தாலாட்டுப்பாடுவதையோ எதை நாம் நினைத்துப் பார்த்தாலும், நமது நாட்களிலும் இது உண்மையாய் உள்ளது.

சவுல், நம்பிக்கையிழந்த ஒரு மனிதராயிருந்தார்; அவர் ஏதொன்றையும் முயற்சி செய்து பார்க்க மனவிருப்பம் கொண்டவராயிருந்தார். "நன்றாய் வாசிக்கத்தக்க ஒருவனைத் தேடி, என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" என்றார் (16:17).

சவுலின் இந்த வேண்டுகோளைக் கேட்க அவரருகில் இருந்த வேலைக்காரர்களில் ஒருவர், தாவீதின் வயதையுடையவராகவும், சுரமண்டல வாசிப்பில் தாவீதின் திறமையைப் பற்றி அறிந்தவராகவும் இருந்தார். இது ஒரு வியப்புக்குரிய தற்செயல் அல்ல, ஆனால் தாழ்மையான ஒரு ஆடுமேய்க்கும் பையனை அவன் ராஜாவாயிருப்பது எப்படி என்பதைக் கற்பதற்காக அவனை அரண்மனைக்கு அழைத்து வருவதற்கு, தேவன் தமது அருளிரக்கத்தில் திட்டமிட்டுச் செயல்படுத்தியதாக இருந்தது. அந்த இளைஞர் (வேலைக்காரர்), "இதோ, பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன்; அவன் வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்; கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார்" (16:18). இது மனதில் பதியக் கூடிய விவரக் குறிப்பாக இருந்தது.[34] இந்தப் பட்டியலில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டதையே சவுல் மிகவும் முக்கியமானதாக நினைத்திருப்பார்: "அவன் வாசிப்பதில் தேறினவன்." ஆயினும், கடைசிச் சொற்றொடர்தான் மிகவும் முக்கியமானதாக இருந்தது: "கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார்." கர்த்தருடைய ஆவி சவுலை விட்டுச் சென்றிருந்தது; அவருக்கு அவரது தேவன் தேவைப்பட்டார்.

சவுல் உடனடியாகத் தாவீதுக்கு ஆளனுப்பினார் (16:19). விரைவிலேயே அந்த இளைஞர் (தாவீது) ஒரு வெள்ளாட்டுக்குட்டியை ஓட்டிக் கொண்டு, அப்பம் திராட்சரசம் ஆகியவற்றைக் கழுதையொன்றின் மீது ஏற்றிக் கொண்டு சவுலின் இல்லம் வந்து சேர்ந்தார் (16:20). உடனடியாக தாவீது சவுலுக்கு ஊழியம் செய்யத் துவங்கினார் (16:21).[35] வசனம் 23, நமக்கு இவ்வாறு கூறுகின்றது: "அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி

*சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவான்."*

*தாவீதின் சுரமண்டலத்தினுடைய மென்மையான கம்பிகள் சவுலின் சிந்தையை இதப்படுத்தின என்பதில் ஐயமில்லை - ஆனால் பொல்லாத ஆவியைத் துரத்துவதில் தாவீது இசைக் கருவியை இசைத்தல் என்பது என்ன வகையில் செயல்பட்டது? நிதானித்து யோசியுங்கள். தாவீது என்ன வகைப்பட்ட பாடல்களை எழுதினார்? அவர், "இரவின் விண்மீன்கள் ... பெரிதாய் ஒளி வீசுவதாய் உள்ளன ... யூதாவினுடைய இருதய ஆழத்தி லிருந்து" என்றோ அல்லது, "ஆகிலா மலையில் என் சிலிர்ப்பைப் பறி கொடுத்தேன்" (1 சாமு. 23:19) என்றோ எழுதினாரா? பக்திசாராத பாடல்களைத் தாவீது எப்பொழுதாவது எழுதியிருந்தாரென்றால், அது தொடர்பான பதிவேடுகள் நமக்குக் கிடைக்கவில்லை.[36] மாறாக, அவர், தேவனைப் பற்றியும் அவருடன் தமக்குள்ள உறவைப் பற்றியும் எழுதினார்:*

> *உமது விரல்களில் கிரியையாகிய உம்முடைய வானங்களையும்,*
> *நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான்*
> *பார்க்கும்போது,*
> *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர்*
> *விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்? ...*
>
> *வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய*
> *மண்டலங்கள் அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது ...*
>
> *நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்*
> *பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே*
> *கூட இருக்கிறீர் ... (சங். 8:3, 4; 19:1; 23:4).*

*ஆடு மேய்க்கும் வாழ்வின் தனிமையில் தாவீது பல விஷயங்களைக் கற்றுக் கொண்டார்; தேவனை ஆராதிப்பது என்பது அவர் கற்றுக் கொண்ட மிக முக்கியமான விஷயமாயிருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. மேய்ப்பு வயல்களில் தனிமையில் தாவீது, தேவனுடைய வசனத்தைப் பற்றியும் தேவனுடைய உலகத்தைப் பற்றியும் நினைத்துப் பார்த்து, தேவனை ஆராதிப்பவரானார். கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது சுவாசித்தல் போல (அவருக்கு) இயல்பானதாயிற்று.*

*நாம் நம் தேவனை ஆராதிப்பது - உண்மையாய் ஆராதிப்பது - எப்படி என்பதைக் கற்றுக் கொள்வது அல்லது மறுபடி கற்பது என்பதே இன்றைய நாட்களில் நம் மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. புதிய ஏற்பாட்டு சபை ஆராதனையின் சில வெளிப்பாடுகள் பழைய ஏற்பாட்டின் ஆராதனை மறைமை போலிருப்பதில்லை (எடுத்துக்காட்டாக, தாவீது பயன்படுத்தியது போல சுரமண்டலத்தையாவது அல்லது வேறு எந்த இசைக்கருவியையாவது புதிய ஏற்பாட்டு சபை தனது ஆராதனையில் பயன்படுத்தியிருந்ததில்லை), ஆனால் ஆராதனையின் மையப் பொருளானது ஒரே விதமானதாகவே*

*(இன்றும்) நிலைத்துள்ளது. நாம், எல்லாவற்றையும் படைத்தவர் மீது ஒரு பரிசுத்த பயபக்தி கொண்டிருக்க வேண்டும், அவரது மாட்சிமைக்கு முன்பாக தாழ்மையுடன் வீழ்ந்து வணங்க வேண்டும், மற்றும் அவரது கட்டளைகளுக்கிணங்க நமது அன்பையும் மதித்தலையும் நேர்மையுடன் அவரிடம் வெளிப்படுத்த வேண்டும். "இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின" (2 சாமு. 23:1) தாவீதின் இருதயப்பூர்வமான ஒப்புவித்தலுக்கு நாம் திரும்ப வேண்டிய அவசியம் இருக்கையில், களைத்துப்போன ஆத்துமாக்களை ஆவிக்குரிய உணர்வெழுச்சியின் வெளித்தோற்றத்திற்குத் தூண்டியெழுப்ப தந்திரம் வாய்ந்த முகாம்களைப் பலர் நடத்தித் திரிகின்றார்கள்.*

*தாவீதின் பாடுதலும் இசைக் கருவியை இசைத்தலும், பொல்லாத ஆவியை சவுலிடமிருந்து ஏன் புறப்பட செய்தன? ஏனெனில் சவுலின் பிரச்சனையானது சிந்தையிலுள்ள அதிகமான வியாதியாய் இல்லாமல், அது ஒரு ஆத்துமாவின் சுகவீனமாய் இருந்தது. தாவீது தேவனைக் குறித்துப் பாடும்போது, சவுலின் இருதயமானது தற்காலிகமாக கர்த்தரைப் பற்றிய சிந்தனையால் நிரப்பப்பட்டது, ஆகவே அவதிப்படுத்தும் ஆவிக்கு அங்கு இடமில்லாதிருந்தது.*

*அடுத்த அதிகாரத்தில், "தாவீது சவுலை விட்டுத் திரும்பிப் போய் பெத்லெகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்" என்று கூறப்படுகிறது (1 சாமு. 17:15). ஒன்று சாமுவேல் 16:21 வசனம், "சவுல் தாவீதை மிகவும் சிநேகித்தார்" என்று கூறுகிறது. தேவனுடைய அருளிரக்கத்தில், ஆடு மேய்க்கும், தாழ்மையான ஒரு பையன் ராஜாவுக்கு நெருக்கமானான், ஒரு நாட்டை ஆளுவதெப்படி என்று கற்றுக் கொண்டான், மற்றும் அதிகாரத்தில் இருந்த மக்களின் மதிப்பை ஈட்டிக் கொண்டான் - இவை எல்லாமே தாவீதுக்கான தேவனுடைய திட்டத்தில் முக்கியமான காரணிகளாக இருந்தன. தேவனுடைய வழிகள் வியப்புக் குரியவைகள் அல்லவா?*

## *முடிவுரை*

*இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் நான், ஃப்ளாரன்ஸ் நகரில் தாவீதின் சிலையொன்றைக் கண்டது பற்றிக் கூறியிருந்தேன். அந்தச் சிலையைப் பற்றிப் பின்வரும் கதையொன்று கூறப்படுகிறது: சிற்பியான மைக்கேல் ஆஞ்செலோ, கரடுமுரடாய் வெட்டப்பட்ட ஒரு சலவைக் கல் பாளத்தைக் கண்டார், அது பேராலயப் பணிமனையில் ஒன்றுக்கும் பயனற்றது என்று வீசப்பட்டுக் கிடந்தது. அதன் ஒரு பக்கத்தைத் திறமையற்ற சிற்பி ஒருவர் உடைத்துப் போட்டிருந்தார். அந்த (சலவைக்) கல் சிதைக்கப்பட்டதென்று கருதிய அவர், அதைப் புறம்பே வீசியெறிந்து விட்டார். அந்தக் கல்லை எடுத்த மைக்கேல் ஆஞ்செலோ, அதன் "சிதைவுற்ற" பகுதியை தனது கருப்பொருளின் (தாவீது சிலையின்) பின்பக்கமாகத் திறமைமிக்க வகையில் செதுக்கி எடுத்தார். ஆகாததென்று ஒதுக்கப்பட்ட ஒரு கல்லில் இருந்து, மைக்கேல் ஆஞ்செலோ தனது தலை சிறந்த படைப்பான தாவீது சிலையை*

*உண்டாக்கினார்.*

*உங்கள் சொந்த வாழ்வானது சேதமுற்று, பயனற்றதாகியதென்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாம், ஆனால் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராவது" என்பதற்கு ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணுக்கு (அவர்களின் வாழ்வின் எந்த வேளையும்) மிகத் தாமதமானது அல்ல. தாவீது செய்தது போல் நீங்கள் உங்கள் இருதயங்களைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தால், தேவன் உங்களை (தமது) மென்மையான, திறன்மிக்க கைகளில் எடுத்து, உங்களைத் தமது மகிமைக்கென்று ஒரு கருவியாக வடிவமைக்க அவரால் முடியும்.*

*நாம் ஒவ்வொருவரும் தாவீதைப் போலிருக்க - அல்லது சவுலைப் போலிருக்க - முடியும். தேவனின் ஆவி நம்மீது தங்கியிருக்க முடியும் (அப். 2:38; கலா. 4:6) - அல்லது அது நம்மை விட்டு நீங்க முடியும். அது நமது முடிவாகவே உள்ளது.*

---

## பிரசங்க மற்றும் காட்சி - உதவிக் குறிப்புகள்

***பிரசங்கக் குறிப்புகள்:*** *தாவீதைப் பற்றிய இந்தப் பின்னணி விவரங்கள் பெற்றோர்களுக்கு "எவ்விதம்" என்பதற்கான பாடமாகப் பயன்படுத்தப்பட முடியும். பாடத் தலைப்பை "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராக வளர்வது எவ்வாறு" என மாற்றிக் கொள்ள இயலும். அப்போது வலியுறுத்தப்பட வேண்டிய சில கருத்துக்கள் பின்வருமாறு: (1) உங்கள் பிள்ளைக்கு ஆவிக்குரிய வேர்களைக் கொடுங்கள், (2) உங்கள் பிள்ளைக்கு பொறுப்புணர்வைக் கொடுங்கள், (3) உங்கள் பிள்ளையை சுயமதிப்பை மேம்படுத்திக்கொள்ள உதவுங்கள், மற்றும் (4) உங்கள் பிள்ளைக்கு தேவனை நேசிக்கக் கற்றுக் கொடுங்கள்.*

*தாவீது பற்றிய பிரசங்கம் அல்லது போதனைக்குத் தயாரித்துக் கொண்டிருக்கையில், ஏற்புடைய சங்கீதங்களின் மீதான பாடங்களை அந்தப் பாடங்களுக்குத் துணைப்பாடமாக்க நீங்கள் விரும்பலாம். David and His Psalms* (Living Word Series, Sweet Publishing, Ft. Worth, Tex., 1964) *என்ற புத்தகத்தை உங்களால் பெற முடிந்தது என்றால், இது மிகுந்த உதவியாக இருக்கும். இதன் எழுத்தாளரான ஹாரிஸன் ஏ. மாத்யூஸ் அவர்கள், தாவீதின் வாழ்க்கைச் சுருக்கம் ஒன்றைக் கொடுத்து, அதை அவரது வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய சங்கீதங்களுடன் பிணைத்துள்ளார்.*

*இந்த முதல் பாடத்துடன் தொடர்புடைய வகையில் சங். 23ஐப் பயன்படுத்தலாம் என்பது மிகத் தெளிவானதாக உள்ளது. சங்கீதம் 8; 19; 29 போன்ற இயற்கை பற்றிய தாவீதின் சங்கீதங்களும் இந்த காலகட்டத்தில் இயற்றப்பட்டவைகளாயிருப்பதால் அவற்றையும் உள்ளடக்கச் சாத்தியக் கூறு உண்டு.*

***காட்சி-உதவிக் குறிப்புகள்:*** *தாவீதின் காலத்தில் இருந்த பலஸ்தீன நாட்டின் வரைபடம் ஒன்று கிடைக்குமென்றால், அதைப் பெரியதாக்கி,*

*இந்த முதல் பாடத்தின்போது அறிமுகப்படுத்தலாம். நான்கு முக்கிய கருத்துக்களை அறிமுகப்படுத்த திறவுகோல்-வார்த்தை அட்டைகள் பயன்படுத்தபட முடியும். குழலாக்கப்பட்ட பசுவின் கொம்பு ஒன்றில் ஒலிவ எண்ணெயை நிரப்பி அதைக் காண்பித்தால், அது ஆர்வமிகுந்த பொருட்கருத்துப் பாடமாயிருக்கும்.*

---

*குறிப்புகள்*

*[1]தாவீது முதன் முதலாக ஆட்சி செய்யத் தொடங்கின பொழுது, அவர் முப்பது வயதுடையவராயிருந்தார் (2 சாமு. 5:4). சவுல் நாற்பது ஆண்டு காலம் ஆட்சி செய்தார் (அப். 13:21). இது, சவுலின் அரசாட்சிக் காலத்தின் பத்தாம் ஆண்டில் தாவீது பிறந்திருக்கலாம் என்று அர்த்தப்படுத்துகின்றது. ஆகையால், 1 சாமுவேல் 13:14ம் வசனம், தீர்க்கதரிசன கடந்த கால வகையில் எழுதப்பட்டிருக்க வேண்டும், இது எதிர்கால நிகழ்ச்சி ஒன்றை கடந்தகாலத்தில் உரைக்கின்றது, ஏனென்றால் தேவன் ஒன்றைக் கூறும் பொழுது அது ஏற்கனவே நடந்து விட்டதாகக் கூறுமளவிற்கு அவ்வளவு நிச்சயமானதாக உள்ளது. [2]1 சாமுவேல் 17:12. பெத்லெகேமுக்குத் தாவீது தம் இருதயத்தில் விசேஷித்த இடம் ஒன்றைக் கொடுத்திருந்தார்; பின்னாளில் அவர் அங்கிருந்த கிணற்றின் தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்று ஏங்கினார் (2 சாமு. 23:15; 1 நாளா. 11:17). [3]1 சாமுவேல் 17:12-14 வசனப்பகுதியானது, இந்த எட்டு மகன்களைப் பற்றியும், அவர்களில் தாவீது கடைசியானவராய் இருந்தது பற்றியும் குறிப்பிடுகிறது. 1 நாளா. 2:13-15ல் யூதாவைப் பற்றிய பதிவேடு ஏழு மகன்களை மட்டுமே பட்டியலிடுகிறது. ஒருவேளை, அவர்களில் ஒருவர் இளைஞராயிருந்த பொழுதே இறந்து போயிருக்கலாம் அல்லது பிள்ளையின்றி இறந்து போயிருக்கலாம். ஒன்று நாளா. 2:16, 17 வசனப்பகுதிகள் இரண்டு சகோதரிகள் பற்றிக் கூறுகின்றன. [4]"தாவீது" என்பது dawidh* (Gk.: *dabid*) *என்ற எபிரெய வார்த்தையிலிருந்து வந்துள்ளது. தாவீதின் பெயர், "அவரது அன்பார்ந்த" அல்லது "யெகோவாவிற்கு அன்பார்ந்த" என்று அர்த்தம் தரும் வார்த்தையிலிருந்து வந்ததாகச் சிலர் நினைக்கின்றனர். வேதாகமத்தில் வேறு எவருக்கும் இப்பெயர் இல்லை. [5]தாவீது ஆடுகளைக் கவனித்துக்கொள்ள (இது, நல்வசதியுள்ள குடும்பங்களில் வேலைக்காரர்களால் செய்யப்பட்ட பணிப்பொறுப்பாயிருந்தது) வேண்டிய தாயிருந்தது என்ற உண்மையுடன், அவரது குடும்பமானது ஓரளவுக்கு வறுமைப் பட்டதாயிருந்தது என்பதற்குச் சுட்டிக்காட்டுதல்கள் உள்ளன. தாவீது கவனித்துக் கொண்டிருந்த மந்தை மிகச் சிறியது என்பது உறுதி (1 சாமு. 17:28) - மற்றும் சவுலுக்கு அனுப்பப்பட்ட வெகுமதி (அது அவ்வாறானதாக இருக்குமென்றால்) ஒரு அரசனுக்குக் கொடுக்கப்படத் தகுதி மிகவும் குறைந்ததாகக் காணப்பட்டது (1 சாமு. 16:20). 1 சாமுவேல் 18:23ஐ யும் காணவும். [6]ஒரு பையனாக இருந்த வேளையில் நான் வயது சென்றவர்களுடன் வேலை செய்த பொழுது, கடினமான, அழுக்கான வேலைகள் - இவை கோதுமை அறுப்பின்போது, வைக்கோல் போர் அடுக்கும்போது, அல்லது எப்பொழுதெல்லாம் ஏற்படுகிறதோ அப்போது - நான் அடிக்கடி "இனக்குழுவின் கோலில் தாழ்ந்த மனிதனாக" வைக்கப்படுவதுண்டு. அநேகமாக உங்கள் சொந்த அனுபவத்தில் நீங்கள் இதே போன்ற விவரிப்பு ஒன்றைக் கொண்டிருக்கலாம். [7]மேய்ப்பன் என்ற வகையில் தாவீது வாழ்ந்திருந்த வெளிப்புற வாழ்வினால் அவரது விசுவாசம் வளர்ந்து பெலப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. [8]சில வேளைகளில் மேய்ப்பர்கள் ஒன்றாயிணைந்து வேலை செய்வதுண்டு (இ.வ. 1 சாமு.*

25:16; லூக். 2:8 முதலியன), ஆனால் பெரும்பாலும் அதிலும் விசேஷமாக, மந்தை மிகச் சிறியதாக இருக்கையில் அவர்கள் தனிமையிலேயே வேலை செய்தார்கள். [9]பறத்தல் பற்றி விமானிகள் இதே வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நான் கேள்விப்பட்டுள்ளேன். [10]Lynn Anderson, "The Heart of the Matter'' (N.p., n.d.), sound cassette.

[11]நோபில் இருந்த ஆசாரியர்கள் தாவீதை ஆதரித்தார்கள் என்று சவுல் முடிவு செய்த பொழுது, அவர்களைக் கொலை செய்ய ஆணையிட்ட நிகழ்ச்சியினால், இவரது (சாமுவேலின்) இந்தப் பயமானது நியாயப்படுத்தப்பட்டது (1 சாமு. 22:6-19). [12]"பரிசுத்தம் பண்ணுதல்" என்றால் "தனியே பிரித்து வைத்தல்" என்று அர்த்தப் படுகிறது. அவர்கள் தங்களைச் சடங்கு முறைமையின்படி தூய்மைப்படுத்திக் கொண்டு அந்த பலிக்கென்று தங்கள் இருதயத்தையும் வாழ்வையும் தயார் செய்து கொள்ள வேண்டியிருந்தது. [13]ஈசாயின் குடும்பத்தார் பலிசெலுத்துதலுக்கு வரும் வரையில் அவர்களை சாமுவேல் பார்த்திராததால், ஈசாயி மற்றும் அவரது மகன்களுக்கான சாமுவேலின் ''பரிசுத்தப்படுத்துதல்'' மற்றும் அழைப்பு ஆகியவை முற்றிலும் மூப்பர்கள் மூலமாகவே நடைபெற்றிருந்திருக்க வேண்டும். [14]அடுத்த இரண்டு மூத்த மகன்கள் அபினதாப் மற்றும் சம்மா என்பவர்கள் ஆவார்கள் என்று கூறுகிற 1 சாமுவேல் 17:13ஐயும் கவனிக்கவும். [15]1 சாமுவேல் 16:7ஐக் கவனிக்கவும்: ''இவனுடைய சரீர வளர்ச்சி'' மற்றும் ''வெளித்தோற்றம்,'' [''கண்கள்/முகம்'' என்ற நேரடி அர்த்தம் கொண்டது]. [16]1 இராஜா 8:39; 1 நாளா. 28:9; லூக். 16:15 ஆகியவற்றைக் கவனிக்கவும். [17]Rick Atchley, "Here Comes the Judge'' (N.p., n.d.), sound cassette. [18]சிலர் மத்தேயு 7:1ஐக் குறிப்பிட்டு, கிறிஸ்தவர்கள் ஒருக்காலும் நியாயம் தீர்க்கக் கூடாது என்று முடிவு செய்கின்றார்கள். மத்தேயு 7:1-5 வசனமானது மனித ரீதியான எல்லா நியாயத்தீர்ப்புகளுக்கும் ஒரு தடைச் சட்டமாயிருப்பதில்லை (அடுத்த வசனமாகிய 6ஐக் கவனியுங்கள், இது ஒரு நியாயந்தீர்த்தலை மறைமுகமாய் குறிப்பிடுகின்றது). ஆயினும் மத்தேயு 7:1 முதல் உள்ள வசனங்கள் சாமுவேல் மேற்கொண்டது போன்ற வெடுக்கென்ற நியாயத்தீர்ப்புகளுக்கு எதிரானவை யாகவே உள்ளன. இது மிகவும் கொடுமையான நியாயத்தீர்ப்புகளுக்கு எதிரான தாவும் உள்ளது. [19]இது தாவீது ஒன்றுக்கும் உதவாதவர் என்று கருதப்பட்டதால் ஏற்பட்ட தென்று சிலர் நினைக்கின்றார்கள். ஈசாயிக்கு ஏற்கனவே ஏழு மகன்களும் (யூதர்கள் ஏழு என்ற எண்ணை பரிபூரணமான எண்ணாகக் கருதினார்கள்) இரண்டு மகள்களும் இருந்தார்கள், இது போதுமான நல்ல அளவாகவே இருந்தது. ஒருவேளை, தாவீது (அவர்களுக்கு) "எதிர்பாராத ஒரு ஆசீர்வாதமாய்" இருந்திருக்கலாம். [20]தாவீதின் முன்னோர்களில் மோவாபியப் பெண்ணான ரூத்தும் உள்ளடங் கியிருந்தாள்.

[21]உணவு மேஜையைச் சுற்றி அமர்ந்து கொண்டு அந்த ஏழு மூத்த மகன்களும் தங்கள் வீரதீரச் செயல்களைப் பேசிக் கொண்டிருந்த குடும்பக் காட்சியையும், அப்பொழுது தாவீது வந்து, "இன்று நான் ஒரு கவிதை எழுதினேன்" என்று கூறும் காட்சியையும் நீங்கள் சித்தரித்துக் காண்பிக்க விரும்பலாம். [22]சங்கீதம் 27:10, "என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும் ..." என்று மொழிபெயர்க்கக் கூடியதாயிருக்கலாம், ஆனால் எனது கேள்வி ஒரே மாதிரியாகவே நிலைத்துள்ளது. தந்தை, தாய் ஆகிய இரண்டு பெற்றோர்களாலும் அன்பு பொழியப்பட்ட ஒரு குடும்பத்தில் வளர்க்கப்பட்ட என்னால், அவர்கள் என்னைக் கைவிடுதல் பற்றிப் பேசுதல் என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலவில்லை. [23]தாவீது பிறப்பின் போது சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பு உள்ளது. [24]சிலவேளைகளில் ஆடுகளை தனியே விட்டு விட்டுச் செல்லும் பழக்கமும் இருந்துள்ளது (இ.வ. லூக். 2:16; 15:4). [25]முதல் நூற்றாண்டு வரலாற்றாளராயிருந்த

*யோசிப்பஸ் பின்வருமாறு எழுதினார்: "... அவர் [சாமுவேல்] தாவீதின் முன்னிலையில் தைலத்தை எடுத்து அவர் மீது அபிஷேகம்பண்ணி, அவரது காதில் இரகசியம் பேசி, அவரை தேவன் தங்கள் ராஜாவாயிருக்கும்படிக்குத் தேர்ந்தெடுத்துள்ளதாக அவரைப் பழக்கப் படுத்தினார்; மற்றும் அவர் நீதியுள்ளவராயிருக்க வேண்டுமென்று புத்தி கூறினார்"* Josephus, *Antiquities,* 6.8.1 (61-65). [26]*ஒருவேளை, ஆவி தாவீதின் மீது வந்த பொழுது, தேவனுடைய திட்டம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம்.* [27]*இதே வகையான எடுத்துரைத்தலானது, சிம்சோன் உட்பட பல நியாயாதி பதிகள் (நியா. 14:6, 19; 15:14), சவுல் (1 சாமு. 10:6, 10; 11:6) மற்றும் பிறரைக் குறித்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. "அந்நாள் முதற்கொண்டு" என்ற சொற்றொட ரானது, கர்த்தருடைய ஆவி பிறரின் மீது இறங்கியதைக் காட்டிலும் அதிகம் நிலையான வகையில் தாவீதின் மீது இறங்கியிருந்ததை சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம்.* [28]*அவர்களின் இருதயங்களில் வெறுப்புணர்வு பற்றியெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை (1 சாமு. 17:28).* [29]*இந்த விவரித்தலானது பல்வேறு ஆதாரமூலங்களில் இருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.* [30]*சாமுவேலினால் சவுல் ராஜாவாக அபிஷேகம் செய்விக்கப்பட்ட பின்பு (1 சாமு. 10:1), கர்த்தருடைய ஆவி அவர் (சவுல்) மீது வந்திறங்கிற்று (1 சாமு. 10:10 முதல்).*

[31]*இதே எபிரெய வார்த்தையானது யோவேல் 2:13ல் பயன்படுத்தப்படுகிறது, அது பொல்லாதவர்களைத் தேவன் தண்டிப்பதைக் குறிக்கின்றது. இவ்வார்த்தை யோனா 3:10ல் கூடப் பயன்படுத்தப் படுகின்றது, இவ்விடத்தில் இது "தீங்கு" என்று* NASB *யில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [32]*எபிரெயர் 12:5-11ஐக் காணவும். சவுல் ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணிக்கப் பட்டிருக்கலாம், ஆனால் இரட்சிக்கப்பட வேண்டிய ஆத்துமா ஒன்று அவரிடத்தில் இன்னமும் இருந்தது.* [33]William Congreve, as quoted in *Bartlett's Familiar Quotations,* 14th ed. (Boston: Little, Brown, and Co., 1968), 391. [34]*அதிகாரம் 16ன் முடிவு பற்றிய கால வரிசையின் பிரச்சனைகள் சில உள்ளன. அநேகமாக நாம், அதிகாரம் 16ன் முடிவை சவுல் மற்றும் தாவீது ஆகியோருக்கிடையிலான தொடக்க கால உறவின் அறிமுகம் என்று நினைக்க வேண்டும் - இதில் அடுத்த சில அதிகாரங்களுக்கான விவரங்கள் நிறைந்துள்ளன. விஷயம் இவ்வாறு இருக்குமென்றால், இந்தக் காட்சியானது அதிகாரம் 17ல் கோலியாத்துடனான யுத்தத்திற்குப் பின்பு நடைபெறுகிறது - மற்றும் "பராக்கிரமசாலி", "யுத்த வீரன்" என்ற சொற்றொடர்கள், போர்வீரன் என்ற வகையில் வளர்ந்து கொண்டிருந்த தாவீதின் புகழைக் குறிப்பிட்டன. ஆயினும், இது தாவீது கோலியாத்தை தோற்கடிக்கும் முன்னர் நடைபெற்றிருந்தால், "பராக்கிரமசாலி", "யுத்தவீரன்" என்பவை, வனவிலங்குகள் மற்றும் கள்வர்கள் ஆகியோரிடமிருந்து தமது ஆடுகளைக் காத்துக் கொள்வதில் தாவீது கொண்டிருந்த வீரம் மக்களால் அறியப்பட்டிருந்தது என்று அர்த்தமாகும்.* [35]*ஒன்று சாமுவேல் 16:21, 22 வசனப்பகுதி, சவுல் என்றென்றைக்கும் தமது ஆயுத தாரியாக இருக்கும்படி தாவீதைக் கொண்டு வந்தது பற்றிக் கூறுகின்றது. இது 1 சாமுவேல் 18:2ஐ எதிர்பார்த்திருப்பதாகக் காணப்படுகிறது.* [36]*தாவீது, 2 சாமுவேல் 1ல் சவுலின் மீதும் யோனத்தான் மீதும் புலம்பல் பாடலைப் பாடியிருத்தல் என்பது, தேவனைக் குறிப்பிடாதபடியினால், ஒரு "உலகப்பிரகாரமான" பாடலாகவே உள்ளது என்று கூறுகின்றார்கள். இருப்பினும், எஸ்தரின் சரித்திரத்தில் தேவனைப் பற்றி எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை, ஆனாலும் அது "உலகப்பிரகாரமான" வகையில் இருந்து வெகுதூரத்தில் உள்ள புத்தகமாக உள்ளது.*